இராவண தத்துவம்

प्रज्ञानं ब्रह्म

சுவாமி சித்பவானந்த

இராவண தத்துவம்

ஆராய்ச்சி

உலகில் தோன்றியுள்ள உயிர்வகைகளையும் ஏனையவற்றையும் நல்லவை தீயவையென்று இருதரமாகத் திட்டப்படுத்தி வகுக்க முடியாது. நலம் பொலம் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டே இருக்கின்றன. நல்லது என்று சொல்லப்படும் அமிர்தத்தை முறைதவறிக் கையாண்டால் அது நஞ்சு ஆய்விடும். விஷத்தைப் பாங்குடன் பிரயோகித்தால் அது மருந்து ஆகும். எப்பொருள் எத்தன்மை உடையதாயிருப்பினும் அதில் குணமும் குற்றமும் சேர்ந்தே இருக்கின்றன.

மனிதரில் சிலரை நினைவுக்குக்கொண்டு வருங்கால் அவர்கள் கேடு அனைத்துக்கும் உறைவிடம் என்னும் எண்ணம் வருகிறது. அத்தகையவர்களுள் ஒருவன் இராவணன். கொடுமைக்கும் கீழ்மைக்கும் எடுத்துக்காட்டாக அவன் இலங்குகிறான். கருத்தில் வைப்பதற்கும் தகுதியற்றவன் என்கிற எண்ணமே அவனைப்பற்றி ஊட்டப்படுகிறது. ஆனால் உண்மை அங்ஙனமன்று. ஓரம் சார்ந்த ஆராய்ச்சியே அத்தகைய மனநிலையை உண்டுபண்ணுகிறது. நடுநிலையினின்று ஆராயுங்கால் இராவணனுடைய வாழ்க்கையினின்று நமக்குக் கணக்கற்ற தத்துவங்கள் கிடைக்கின்றன. அத்தத்துவங்களெல்லாம் நமது வாழ்க்கைக்குப் பயன்படுபவைகள்.

இராமனுடைய சரிதம் நமக்கு ஒரு போக்கில் பாடம் புகட்டுகிறது. இராவணனுடைய சரிதம் வேறு ஒரு போக்கில் புகட்டுகிறது. உடன்பாட்டில் அமைவது இராமனுடைய போதனை. எதிர்மறையில் அமைவது இராவணனுடைய போதனை. உபமானம் ஒன்று எடுத்துக்கொண்டால், 'நீ எவ்வளவு வல்லவனுயிருந்தாலும் தீயில் கையை வைக்காதே' என்னும் பாடத்தை இராவண வரலாறு புகட்டுகிறது. 'தீயைச் சமைக்கவும் குளிர் காயவும் பயன்படுத்திக் கொள்' என்னும் பாடத்தை இராம வரலாறு விளக்குகிறது. இந்த இரண்டு போதனைகளையும் சேர்த்து எடுத்துக் கொள்ளும்பொழுதே நாம் கற்கும் கல்வி பூர்த்தியாகிறது.

இராமாயணம் என்னும் அற்புதமான நாடகம் இன்றைக்கும் இயற்கையில் ஓயாது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அன்று அந்த நாடகத்தைக் கண்கூடாக நடாத்திக் காட்டவந்த பாத்திரம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தத்துவத்தின் பிரதிநிதியாகத் தோன்றி வந்தார். இராமன் பரமாத்மாவின் வடிவம்; சிதை ஜீவாத்மாவின் வடிவம்; இராவணனே மனே தத்துவத்தின் வடிவம். இன்று ஸ்தூல உடலில் இராமனும் சிதையும் இராவணனும் இல்லை. ஆனால் தத்துவங்களாகிய பரமாத்மனும், ஜீவாத்மனும், மனதும் இருக்கின்றன. அத்தத்துவங்கள் தத்தம் தொழிலைச் செய்துகொண்டும் இருக்கின்றன. ஆகையால்தான் இராமாயணமும் ஓயாது நடைபெற்றுக்கொண்டிருக்

கிறது. இராவணனுடைய பராக்கிரமங்களை இன்று நாம் கண்டுகொண்டே இருக்கிறோம்.

பிறப்பு

நவீன வகுப்பு வாதத்தை இராமாயணத்தில் கொண்டு வந்து வலிந்து திணிப்பவர் இராவணனுடைய பிறப்பைத் தெரிந்து கொள்ளுவது அவசியம். வருணத்தில் அவன் பிராம்மணன்; பிரம்மாவுடைய கொள்ளுப்பேரன். அறிவு, ஒழுக்கம், தபோமஹிமை முதலிய மேன்மைகளனைத்துக்கும் நிலைக்களமாயிருப்பவர் பிரம்மா. சீலத்திலும் தர்மத்திலும் பிரம்மாவுக்கேற்ற பிள்ளையாகப் பிறந்தவர் புலஸ்த்தியர் என்னும் பிரஜாபதி. அவருக்கு மகவாகப் பிறந்தவர் விஸ்ரவஸ் என்னும் பிரம்மரிஷி. தம் தந்தையைப் போன்றும் பாட்டனரைப் போன்றும் இந்த பிரம்மரிஷியும் செந்நெறி வழுவாதவராயிருந்தார். இவருக்குப் புத்திரனாகப் பிறந்தவன் இராவணன். ஆகையால் இவன் குலத்தில் யாருக்கும் கீழ்ப்பட்டவன் அல்லன். குலத்தைப் பற்றிப் பெருமை பேசுகின்றவர்கள் கூட்டத்திலே இராவணன் எப்பொழுதும் முதன்மை வகிக்கக்கூடும். மேலாம் குலத்தினின்று உண்டாகின்ற பிரபாவங்களெல்லாம் இயல்பாக அவனுக்கு வந்து அமைந்திருந்தன.

கல்வி என்னும் கடலின் கரையையும் அவன் ஒருவாறு கண்டறிந்தவன். வேதங்களும் சாஸ்திரங்களும் அவனால் கசடு அறக் கற்கப்பட்டிருந்தன. கலை

ஞானங்கள் அனைத்தும் இராவணனிடத்தே மிளிர்வன வாயின. சுருங்கச் சொல்லின் அவன் ஓதி உணராத கல்வி ஒன்றும் இல்லவே இல்லை.

உடன் பிறந்தார் மூவரில் தமோகுணத்தோடு கூடிய மனோதத்துவமே கும்பகர்ணன். முற்றிலும் சத்துவ மயமானவன் விபீஷணன். இராவணனோ ரஜோ குணத்தோடு கூடிய மனதின் அவதார புருஷன். ஆத்மாவானது பிரகிருதியாகப் பரிணமிக்கும்பொழுது முதலில் அது ஆனந்தமயகோசமாகிறது. அதினின்று விஞ்ஞானமயகோசம் வருகிறது. மனோமயகோசம் விஞ்ஞானமயகோசத்தினின்று உருவெடுக்கிறது. ஆக, மனமானது ஆத்மாவுக்குக் கொள்ளுபேரன் என்னும் முறைமையைப் பெறுகிறது. பிரம்மாவுக்கும் இரா வணனுக்கும் எத்தகைய உறவோ அதே உறவு ஆத்மா வுக்கும் மனதுக்கும் அமைந்திருப்பது கருதற்பாலது.

தோற்றம்

இராவணன் பத்துத் தலைகளையுடையவன். இதன் அடிப்படையான கருத்து ஆராய்தற்கு உரியது. இயற் கையின் அமைப்பில் அனாவசியமாய் எதுவும் ஏற்படுவ தில்லை. ஒரு தலை செய்கிற தொழிலை இரண்டு தலை களைக்கொண்டு செய்விப்பது இயற்கையின் போக்கு அன்று. சிக்கனமே வடிவெடுத்தது என்று இயற்கை யைச் சொல்லவேண்டும். பயன்படாதது ஒன்றையும் அது படைப்பதில்லை. பயன்படுபவைகளையும் அள வெடுத்தே அது அமைக்கிறது. அப்படியாயின் இரா

வணனுக்குப் பத்துத் தலைகள் எதற்காக? இரண்டு தலைகளுடன் பிறக்கும்குழந்தை ஒன்று உயிர் வாழ்வதை நாம் காண்பதில்லை. பயன்படாத பேருறுப்பே அதை மாய்த்துவிடுகிறது. பின்பு இராவணன் எங்ஙனம் பத்துத் தலைகளுடன் உயிர்வாழ்ந்திருக்கக்கூடும்? மனதைப் பற்றிய ஒரு பேருண்மை இராவணன் மூலம் உருவகப் படுத்தி இயம்பப்படுகிறது. கருமேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்கள் வாயிலாக மனது வேலை செய்கிறது. பத்து இந்திரியங்களும் அதற்குப் பத்துத் தலை போன்றவைகள்.

இஷ்டப்பட்டபடி இராவணன் ஒரு தலையுடன் இருப்பான். ஒன்றுக்கு மேற்பட்டுப் பத்துத் தலைகளுடனும் இருப்பான். வேண்டும் வடிவங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளும் தன்மை அவனுக்குண்டு. இன்றைக்கும் இக்கூற்றுகளை நமது மனது நிரூபிக்கிறது. எப்பொழுது மனது எதை எண்ணுகிறதோ அப்பொழுதே அது எண்ணப்பட்ட பொருளின் வடிவத்தை எடுத்துக் கொள்ளுகிறது. பத்து இந்திரியங்களுள் தனக்கு இஷ்டப்பட்ட இந்திரியங்களைக்கொண்டு மனது ஏககாலத்தில் வேலை செய்கிறது. ஆக மனதின் செயல்களை இராவணனுடைய வாழ்க்கை உருப்படுத்தி விளக்குகிறது. இரண்டையும்சீர் தூக்கிஆராய்பவரே இராவணனுடைய உருமாறும் தன்மையை நன்கு ரசிக்கவல்லவர் ஆவர்.

சமஸ்த இலக்ஷணங்களும் அமையப் பெற்றவன் இராவணன். சுந்தரசொரூபி என்று அதனைத்தான்

சொல்லவேண்டும். அவனுடைய காயம் காந்தியுடன் மிளிர்ந்துகொண்டிருந்தது. தேஜசே வடிவெடுத்தது அவனுடைய தேகம். செந்தாமரை போன்று சிவந்த கண்களையுடையவன் அவன். இராஜலக்ஷணத்தோடு கூடிய நீண்ட புஜங்கள் அவனுக்கு உண்டு. பொன் குடத்துக்குச் சந்தன பொட்டு வைத்தாற்போன்று அவன் யாண்டும் செஞ்சந்தனத்தை மேனியில் பூசிக்கொண்டிருந்தான். அதனால் அவனுடைய இலாவண்யம் மேலும் அதிகரித்தது. இந்திரனுடன் போராடியபொழுது ஐராவதத்தின் தந்தங்களால் தாக்குண்டு உண்டான காயங்களின் காய்ப்புகள் வீரத்துக்கு அறிகுறியாக விளங்கின. அவனுடைய பருத்த தோள்களில் இந்திரனுடைய வஜ்ராயுதத்தின் அடிகள் திகழ்ந்துகொண்டிருந்தன. அவ்வாறே விஷ்ணு தேவனுடைய சக்ராயுதத்தின் அறுப்புகளும் அவனுடைய தோள்களில் திகழ்வனவாயின. பருத்த உடலுக்கு ஏற்றபடி தோள்களும் தக்க வலிவு பெற்று விளங்கின. சுப லக்ஷணங்களோடு கூடிய நகங்களையும் விரல்களையும் உடைய அவனது உள்ளங்கைகள் பார்ப்பதற்கு ரமணியமாயிருந்தன. அவனுடைய இரு கரங்களை இரும்புத் தடியோடு அல்லது யானையின் துதிக்கையோடு ஒப்பிடலாகும்.

இராவணனுடைய மேனியைப் போன்று அழகும் ஆற்றலும் வாய்க்கப்பெற்ற மனதைப் பெற்றிருப்பது மக்களுக்கு இயலும். அவனுடைய உடலில் பதிந்து கிடந்த தழும்புகள் அவனுடைய வீரச் செயல்களை

விளக்கியது போன்று உயர்ந்த சம்ஸ்காரங்களை நமது மனதில் பதிப்பிப்பது நம்மால் செய்யக்கூடிய செயலாகும்.

தபசு

மனதை ஒருமைப்படுத்துதற்கு உற்ற உபாயம் தபசு. எவ்வுலகில் எதைப்பெறவேண்டுமானாலும் அதற்கேற்ற தபசைச் செய்யவேண்டும். பொருளையும் இன்பத்தையும் நாடுவது காமிய தபசு. வீடுபேறு அல்லது இறைவனை அடைதற்காகச் செய்யும் முயற்சிக்கு நிஷ்காமிய தபசு என்று பெயர். முக்தியில் உள்ள விருப்பமும் முடிவில் போய்விடுகிறது. ஆதலால்தான் அது நிஷ்காமிய தபசு என்று சொல்லப்படுகிறது. எதைப் பெறுதற்கு மனது தகுதியுடையதாகிறதோ அது எளிதில் வந்து கைகூடுகிறது. மனதைத் தகுதி யுடையதாக்குதலே அனைத்துக்கும் மூலகாரணம். இம்மையில் அல்லது மறுமையில் யார் எதைப் பெறுகின்றனரோ அவர் அதன்பொருட்டுத் தம்மைப்பக்குவப்படுத்திக்கொண்ட பின்பே அது அடையப்படுகிறது. தம்மைத் தகுதி யுடையவராகச்செய்துகொள்வது எல்லார்க்கும் பொதுவாக ஏற்பட்டுள்ள விதி. ஆகையால்தான் தபசின் வாயிலாக எதையும் பெறலாம் என்ற கோட்பாடு வந்துள்ளது. தேவர் அசுரர் ஆகிய இருதரத்தாருக்கும் வேண்டியதைப் பெறுதற்குத் தபசு ஒன்றே உற்ற உபாயம்.

இராவணன் நெடுங்காலம் தவம் புரிந்தான். அவனுடைய தவம் நமக்கு உயர்ந்த பாடத்தைப் புகட்டு

கிறது. தபசு என்ருல் என்ன என்பதையும் அவனிடத்திருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடும். பதினுயிரம் வருஷம் அவன் கடுந்தவம் புரிந்தான். காலம் மனதுக்கு அன்னியமானதன்று. ஆதலால் மனது ஒழுங்குப்படும் பரியந்தம் அவன் நெடுநாள் நிஷ்டையிலிருந்தான் என்பது பொருள். அதுபோழ்து அவன் ஆகாரம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. இந்திரியங்கள் தத்தம் தொழிலைச் செய்யாதிருக்கும்படி அடக்குவதற்கும் ஆகாரம் ஏலாதிருத்தல் என்று பெயர். ஓர் ஆயிரம் வருஷம் நிஷ்டையில் கழிந்ததும் தன் பத்துத் தலைகளில் ஒன்றை அறுத்து வேள்வித் தீயில் ஆகுதியாகப் போட்டுவிடுகிருன். இரண்டாவது ஆயிரம் வருஷம் முடிவு பெற்றதும் மற்ருெரு தலை ஹோமாக்கினியில் வீழ்கிறது. மூன்ரும் ஆயிரத்தில் இன்னொரு தலை சாய்கிறது. இப்படி ஒன்பது தலைகள் போய்விடுகின்றன. பதினுயிரம் ஆண்டின் இறுதியில் பத்தாவது தலையும் கிள்ளப்படப் போகிறது! அந்த நெருக்கடியில் பிரம்மா பிரசன்னமாகிருர். வேண்டும் வரத்தைத்தர அவர் முற்படுகிருர்.

இது மனதை ஒட்டிய உயர்ந்ததொரு தத்துவம். நூலின் இழைகள் பலவாருகப் பிரிந்திருக்கும்போது அந்நூலை ஊசியில் கோர்க்கமுடியாது. இழைகளை முறுக்கி ஒருமுனைப்படுத்தும்போது நூலை ஊசியில் செலுத்துவது எளிது. மனதும் அத்தகையது. இந்திரியங்கள் என்று சொல்லப்படும் பத்துவாயில்கள் வழியாக அது சிதறடைகிறது. அப்படி விடாது அதை ஒருமுகப்படுத்திஞல் அது வலிவுமிகப்பெறுகிறது. இன்னும்

ஒரு சான்று எடுத்துக்கொள்வோம். சிதறடைந்து பூமியில்விழும் சூரியக்கிரணங்களைப் பூதக் கண்ணுடியின் வாயிலாக ஒருமுகப்படுத்திஞல் தீமூட்டும் வலிவு அதற்கு வந்துவிடுகிறது. முறுக்கிய நூல்போன்று வலிமையையும், குவிந்த சூரியக் கிரணங்கள் போன்று ஒளியையும் மனது பெறமுடியும். அது அடங்கி ஒரு முகப்படவேண்டும். ஒருமுகப்பட்ட மனதுக்கு எதையும் சாதிக்கும் வலிவு வந்துவிடுகிறது.

கண் இல்லாதவனுக்குக் கேட்கும் சக்தி அதிகரிக்கிறது. காது இல்லாதவனுக்குப் பார்க்கும் சக்தி வலுக்கிறது. இப்படி ஓர் இந்திரியத்தை அடக்கிவிட்டால் மனத்தின் ஆற்றல் மற்றோர் இந்திரியத்தில் மிகைபடத் தோன்றுகிறது. எல்லா இந்திரியங்களையும் ஒன்றன்பின் ஒன்ருக அடக்கிவிட்டால் மனது பேராற்றலைப் பெறுகிறது. எதையும் சாதிக்கும் வன்மை அதற்கு உண்டாகிறது. இப்பேருண்மையை இராவணனுடைய தபசு விளக்குகிறது. பிரம்மா அவனுக்குப் பிரசன்னமாஞர் என்பது பிரபஞ்சத்தில் எதையும் சாதிக்கும் சக்தி அவனுக்கு வந்துவிட்டதென்பதாகிறது.

வ ர ம்

இராவணனிடத்துப் பிரீதியடைந்த பிரம்மா அவனுக்கு வேண்டிய வரத்தைக் கேட்கும்படி ஏவிஞர். தான் என்றும் சாகாத நிலையை அடையவேண்டுமென்று இராவணன் விண்ணப்பித்தான். அது சாத்தியப்படாது என்ருர் நான்முகன். பிரகிருதிக்கு உட்பட்

டிருக்கும் அனைத்துக்கும் அழியும் தன்மையுண்டு. பிரம்மாவுக்கே அழிவுண்டு. மற்ற ஜீவர்களைப்பற்றிப் பின்பு பேசுவானேன்! இவ்வுண்மையைக் கேட்டறிந்த இராவணன் தான் முதலில் கேட்டவரத்துக்குக் கிட்டதட்ட சமனாயிருந்த மற்றொரு வரத்தை வேண்டினான். அதாவது கருடன், நாகன், யக்ஷன், தைத்யன், தானவன், ராக்ஷசன், தேவன் ஆகிய இந்த கணங்களால் தனக்கு ஒருநாளும் மரணம்நேரிடக்கூடாது என்று விரும்பினான். மனிதர்களைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. ஏனென்றால் அற்ப துரும்பைப்போன்ற மனிதர்களிடமிருந்தா அவனுக்கு மரணம் வரப்போகிறது. அத்தகைய வரத்தைக் கேட்பது இராவணன் போன்ற பராக்கிரம சாலிகளுக்குத் தகுமா?

கவிதைக்கு ஏற்ற கருத்துடன் கூடியது இராவணன் பெற்ற வரம். அவனுடைய இயல்புக்கு அது முற்றிலும் பொருந்தியதே. போற்றத்தக்க பொருள் ஒன்றும் அதன்கண் புதைந்து கிடக்கிறது. தேவர்களோடும் அசுரர்களோடும் சீர் தூக்கிப் பார்க்கின் மனிதன் அற்பப் பிராணி என்பது உண்மை. உடல் வலிவில் அவன் உயர்ந்தவன் அல்லன். பலவிதமான பிணிகளுக்கெல்லாம் அவனுடைய உடல் உறைவிடமாகிறது. ஆயினும் அந்த அற்ப மனிதன் ஒருவனுக்கே மனது என்னும் அரக்கனை மாய்க்க இயலுகிறது. ஞானேந்திரியங்கள் ஐந்து, கருமேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்துத் தலைகளோடு கூடி ஓயாது வியவகாரம் செய்யும் மனதே இராவணன் என்று சொல்லப்படுகிறது. அத்

தகைய மனதை வெல்ல அல்லது கொல்ல எந்தத் தேவனுக்கும் ராக்ஷசனுக்கும், தானவனுக்கும், தைத்யனுக்கும், யக்ஷனுக்கும் இயலாது. மனிதனாகப் பிறப்பவனே மனதைக் கொல்ல வல்லவனாகிறான். மனது மாய்ந்த இடமே முக்தி என்று சொல்லப்படுவது. மனம் ஒடுங்கிய இடமே ஈசுவர சான்னித்தியம். மனதை மாய்த்தவன், பெறுபவைகளுள் பெரியதைப் பெற்றவன் ஆகிறான். அத்தகைய செய்தற்கு அரிய செயல் மனிதனாகப் பிறப்பவனது தனியுரிமையாகின்றது. ஆதலாலேதான் எண்ணரிய பிறவிகளுள் மானுடப்பிறவி அரிதிலும் அரிதாய் அமைகிறது.

இராவணன் கேட்ட வரத்துக்கு அனுசரணையாக பிரம்மா இன்னும் இரண்டு வரங்களைத் தந்தார். அவைகளுள் ஒன்று வேள்வித் தீயில் பலியாகக் கொடுத்த ஒன்பது தலைகளையும் திருப்பிப் பெறுதலாம். பொறி வாயில்களை அவித்தல் என்பதன் கருத்து அவைகளைப் பாழாக்குதல் என்பதல்ல. கண்ணைக் குருடாக்குதலும் காதைச் செவிடாக்குதலும் இந்திரிய நிக்கிரகங்கள் ஆகா. மனது அவைகள் வாயிலாக வீணில் அலையாது தடுக்கவேண்டும். ஒவ்வொரு இந்திரியத்தையும் தீயிலிட்டு அவித்துவிட்டது போன்று பாவனை செய்து, மனது அதன்கண் செல்லாது விலகி நிற்பது தபசு. அப்படி எல்லா இந்திரியங்களிடமிருந்தும் மனது எவ்வளவுக்கெவ்வளவு விலகியிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது வலிவையும் தெய்வத் தன்மையையும் பெறுகிறது. வலிவைப்பெற்ற பிறகு மன

தானது வகையுடன் இந்திரியங்கள் வாயிலாக வேலை செய்யலாம். வகையுடன் கரணங்களைக் கையாள்வதில் தீம்மை யொன்றுமில்லை. அப்படி அவைகளைப் பயன் படுத்துதலே வெந்த தலைகளைத் திரும்பப் பெறுவது என்பதாகிறது. இராவணன் தன் தலைகளைப் பழையபடி பெறுவதன் மூலம், அடக்கம் பழகிய மனது பொறிகள் வாயிலாக வேலைசெய்யலாம் என்பது புகட்டப்படுகிறது.

தான் விரும்பும் வடிவத்தை எடுப்பது இராவணன் பெற்ற மற்றொரு வரமாகும். இப்பேருண்மை நம் மெல்லோர்க்கும் பொருந்தியுள்ளது. விரும்பிய வடி வெடுக்கும் தன்மை நம்மிடத்திலும் அமைந்துள்ளது. ஆழ்ந்து ஒன்றை எண்ணும் தருணத்திலும் மனது எண்ணப்படும் பொருளாய்விடுகிறது. ஒவ்வொரு எண் ணத்துக்கும் வடிவம் இருக்கிறது. பூர்வத்தில் உன் டான எண்ணத்திரளின் பரிணாமமே இப்பொழுது நாம் படைத்துள்ள தேகமாகிறது. பிறவிதோறும் நம் விருப் பத்துக்கு ஏற்றவாறு புதிய ரூபத்தை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால் 'காமரூபின்', என்னும் வரப்பிரசாதம் இராவணனுக்கு இருந்ததுபோன்று மனதை உடைய நம்மெல்லோர்க்கும் உண்டு. மனதில் உண்டாகும் எண்ணங்கள் தெய்வத்தன்மை வாய்ந்த வைகளாயிருந்தால் தெய்வத்தன்மையோடு கூடிய வடி வங்களை நாம் எடுக்கக்கூடும்.

இலங்கையைப் பற்றுதல்

நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருந்த திரிகூடம் என்ற பர்வதம் ஒன்று இருந்தது. அம்மலையின்

உச்சியில் இலங்கையென்னும் பட்டணம் அமைக்கப் பெற்றிருந்தது. அமராவதியோடு ஒப்பிடுதற்கேற்ற சிறப்பு வாய்ந்தது அந்நகரம். அதைச் சுற்றிலும் வெள்ளி மயமாகி வெளுத்திருந்த பெரிய மதில் ஒன்று இருந்தது. அப்பேரூரில் மெத்தை, மேடை, முற்றம் முதலிய யாவும் பொன்மயமாயிருந்தன. வெளி வாசற்படிகளோ வைடூரிய மணியால் செய்யப்பட்டவைகள். அதில் யானைகளும் குதிரைகளும் தேர்களும் நிறைந்திருந்தன. வாத்தியங்களின் முழக்கங்களும் அவ்விடத்திருந்து ஓயாது ஒலித்துக்கொண்டிருந்தன. அத்தகைய பட்டணம் நெடுநாளாகக் குபேரனுக்குச் சொந்தமாயிருந்தது. சாமானிய மனிதர்களால் அவ்வூர் அணுக முடியாதது.

இராவணன் குபேரனுக்குத் தம்பி. மாற்றுந்தாய்மார்களுக்கு இருவரும் புதல்வர்கள். இளையவனுக்குப் பயந்து குபேரன் தன் ராஜதானியை விட்டுக் கைலாசத்துக்கு ஓடிவிட்டான். சிவசான்னித்தியமாகிய அந்த இடத்தில் இராவணனுடைய தொல்லை யேற்படாதென்பது மூத்தவனுடைய கருத்து. எல்லாப் பொருள்களும் நிறைந்திருந்த இலங்காபுரியைப் பறிகொடுக்கும்படி அண்ணனுக்கு நேர்ந்தது. அவன் அடைந்த தோல்வி அத்துடன் நின்றுவிடவில்லை. எங்குச் சென்றால் தொந்தரவு தன்னைத் தொடர்ந்து வராதென்று குபேரன் மனக்கோட்டை கட்டினானோ அந்தக் கயிலாய கிரியிலும் அரக்கர்கோன் அவனை எதிர்த்தான். அண்ணனனவன் தம்பியின் கையில் தோல்வியுண்டதே, அத்

570

தாக்குதலின் விளைவாயிற்று. விரும்பிய இடத்துக்கு எடுத்துச் செல்லும் புஷ்பக விமானம் குபேரனுடைய செல்வங்களுள் சிறந்ததாயிருந்தது. இப்பொழுது அதை யும் அவன் இழக்கும்படி நேரிட்டது. ஊர்களுட் சிறந்த இலங்கைக்கு வேந்தனானதுமல்லாது, வாகனங்களுட் சிறந்த புஷ்பக விமானத்தையும் இராவணன் பெறுவா னுயினன்.

மூலப்பிரகிருதியே எண்ணிறந்த செல்வங்களாக வும் இன்பப் பொருள்களாகவும் வடிவெடுக்கிறது. அவைகளையெல்லாம் ஒரு தேவதையாக உருவகப்படுத் தும்போது அவன் குபேரன் அல்லது தனபதி என்னும் பெயர் பெறுகிறுன். நரன் தனத்துக்கு அடிமையாகின்ற படியால் அவன் குபேரனுக்கு வாகனமாகின்றுன். இயற்கையிலுள்ள செல்வங்களெல்லாம் மனதுக்கு முன் பிறந்தனவாயினும் முயற்சியால் மனது அச் செல்வங் களையெல்லாம் தன் வசப்படுத்திக் கொள்ளக்கூடும். குபேரனை இராவணன்வென்று, இலங்கையை கைப் பற்றிய வரலாறு இவ்வுண்மையை விளக்குகின்றது.

பராக்கிரமம்

இராவணனுக்கு லோக-ராவணன் என்னும் பெயர் உண்டு. உலகங்களை யெல்லாம் அழச் செய்பவன் என்பது அதன் பொருள். அரக்கர் கூட்டத்துக்கு அவன் தலைவன். ஆதலால் அத்தகைய அதமர்களுக்கு எப் பொழுதும் இன்பத்தை விளைவிப்பவன். தேவர்களோ டும் அசுரர்களோடும் கின்னரர்களோடும் கூடிய எல்லா உலகங்களையும் பயப்படுத்தவல்ல ராக்ஷசப் பிரபு அவன்.

இந்திரன் முதலிய தேவர்களும் அவனுடைய முகத்தைப் பார்ப்பார்களாயின் அப்பொழுதே பயந்து ஓடிப் போவார்கள். அவன் எவ்விடத்திலாவது நின்றாலும் உலாவினாலும் அவ்விடத்தில் காற்றும் அச்சத்தால் மெதுவாக வீசிக்கொண்டிருக்கும். சூரியன் கொடிய கிரணங்களை உடையவனாயினும் இராவணனைக் கண்டு நடுங்கிக் குளிர்ந்த கிரணங்களைப் பரப்புவான். எங்கெங்கு அவன் சஞ்சரிப்பானோ அங்கெல்லாம் விருக்ஷங்களின் இலையும் அசையாதிருக்கும். நதிகளும்ஓடாது நின்றுகொண்டிருக்கும். முப்பத்து முக்கோடி தேவர்களையும் வென்றவன் அவனே. தனது வீரியத்தைப் பற்றி யெண்ணி அவன் பெரிதும் தற்பெருமை கொண்டிருந்தான். அவன் வகித்த உயர்நிலையில் இருக்கும் யாருக்குத்தான் கர்வம் உண்டாகாது? யுத்தத்தில் பின் வாங்கியதை அவன் கனவிலும் கண்டதில்லை.

துன்பத்தை யறியாத முனிவர்களுக்கும் ரிஷிகளுக்கும் துன்பத்தை யுண்டுபண்ணுதற்குப் பத்துத்தலை இராவணனுடைய பெயரைச் சொன்னால் போதுமானது. அவன் கையில் அவர்கள் பட்ட பாட்டை அத்தபோதனர்களே நன்கு உணர்வார்கள். அல்லலற்று அமைதியுற்றிருக்க விரும்பும் அன்னவர்களை அலக்கழிப்பதில் அவனுக்கு அலாதியான ஆனந்தம்.

இலங்கை வேந்தன் செய்த திக்குவிஜயம் மூவுலகங்களிலும் பரவியது. கீழ், நடு, மேல் ஆகிய எல்லா உலகங்களுக்கும் அவன் எளிதில் போவான். அவனுக்கு சமுத்திர வேகத்தை நிகர்த்த வேகமும் வாயுவோ

டொத்த கமன சக்தியும் உண்டு. அவனுக்கு யுத்தம் புரிதற்கும் விளையாடுதற்கும் வித்தியாசமில்லை. வில்லோசையால் வீணை வாசிப்பதுபோன்று செய்து சத்ருக்களை அவன் மாய்ப்பான். ஓர் அஸ்திரத்தை எடுப்பது போன்று மற்றொன்றை எடுத்துப் பிரயோகிப்பான். அவன் கோபித்தால் மூவுலகும் அவனை எதிர்க்க முடியாது. அத்தகைய பராக்கிரமம் வாய்க்கப்பெற்றவன் இராவணன்.

இப்பராக்கிரமங்கள் அனைத்தும் மனதுக்கு உண்டு. நினைவு கனவு சுழுத்தி ஆகிய மூன்று அவஸ்தைகளிலும் அதன் ஆதிக்கம் செல்லுகிறது. நல்லவர் கெட்டவர் ஆகிய இருதரத்தாரும் மனத்தின் வசப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். மனதோடு போராடாத முனிவர்களே இல்லை யெனலாம். தீர்மானம் செய்து கொண்ட மனதுக்கு எதையும் சாதிக்கும் வல்லமையுண்டு. குளிர் வெப்பம் காற்று மழை முதலியவைகளின் குற்றங்களை நீக்கவும் குணங்களைப் பெருக்கவும் வல்லது மனது. என்னென்ன காரியங்களை யெல்லாம் மனதைக்கொண்டு சாதிக்கலாம் என்பதை இராவணன் தன்னுடைய பராக்கிரமங்களால் விளக்குகிறான். மனது செயலற்றுக் கிடப்பது சிறப்பன்று. செய்ய வேண்டியதைச் சீருடனும் வலிவுடனும் செய்து சாதிப்பதே வாழ்வின் நோக்கமாகும்.

ஆட்சி முறை

அயோத்தி, கிஷ்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று தலைமைப் பட்டணங்களிலிருந்த அரசாங்கங்களை

வால்மீகி மகரிஷி விளக்குகின்றார். தர்மத்துக்கு இருப்பிடம் அயோத்தி. ஆனால் ஆங்கு அரும் பெருஞ்செயல்களின் வெளித்தோற்றம் மிகக்குறைவு. நெறியைத்திரிவு படுத்துதலும், ஆற்றலை நன்கு பயன் படுத்தாமையும் கிஷ்கிந்தையில் காணப்படுகின்றன. மக்கள் இம்மையில் இன்புற்று வாழ்தற்கு அரசனுடைய ஆற்றல் எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை இராவணனுடைய ஆட்சி விளக்குகின்றது. அவனுடைய குடிகள் துன்பம் ஒன்றையும் அறிந்திலர். எல்லாவிதமான இன்பங்களையும் அவர்கள் வேண்டியவாறு துய்த்துத் திருப்தி யடைந்திருந்தனர். உள்நாட்டு கலகத்துக்கும் ஆட்சி முறையைப் பற்றிய அதிருப்திக்கும் ஆங்கு இடமில்லை. ராஜ துவேஷத்தையும் இலங்கையில் காணமுடியாது. வேந்தனுக்காகவென்று குடிகள் எதையும் செய்ய ஆயத்தமாயிருந்தனர். நுழைதற்கரிய இலங்கையினுள் புகுந்து பார்த்த அனுமானுக்கு இத்தகைய காட்சி தென்பட்டது.

மந்திராலோசனை செய்யாது இராவணன் எக்காரியத்திலும் பிரவேசிப்பதில்லை. அமைச்சருடைய எண்ணத்தை அனுசரித்தே அவன் ஒழுகுவானாயினன். ராஜ நீதியில்அவன் பண்டிதன். வேண்டுமானால் சர்வாதிகாரங்களையும் தானே குறைவின்றி நடத்தக்கூடும். அத்தகைய அறிவும் ஆற்றலும் இருந்தும் அமைச்சர்களுடைய அபிப்பிராயத்தைத் தழுவியே ஆட்சி புரிந்தது, அவன் அடைந்திருந்த பண்பை நன்கு விளக்குகின்றது. செயலற்று, ஒன்றுக்கும் உதவாது பெயரளவில் அரசனா

யிருக்கும் கீழ்மை ஒருபுறமுண்டு. ஆணவத்தால் தன் போக்கிலே முயன்று, மக்களுக்கிடையில் துயரத்தை வழங்கும் கொடுங்கோன்மை மற்றொருபுறமுண்டு. இவ் விருதரக் கயமைகளையும் இராவணன் விலக்கினான். முடியரசும் குடியரசும் அவன்பால் ஒன்றிக்கலாயின.

இலங்கேசனுடைய ஜனஸ்தானம் வடக்கே பஞ்ச வடி பரியந்தம் எட்டுகிறது. இப்படி நாற்றிசையிலும் நெடுந்தூரத்தில் அவனுடைய படைகள் எதிரிகளைத் தாக்கவும் நாட்டின் எல்லைப் புறத்தைக் காக்கவும் ஆயத்தமாயிருக்கின்றன. ராமனுக்கும் கரனுக்கும் நடந்த குட்டிப்போர் உடனே தலைமைப் பட்டணத் துக்கு எட்டுகிறது. ஆங்காங்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஒற்றர்களே விரைவில் வினையாற்றுதற்கு மூலகாரண மாகின்றனர். எதிரிகள் உள்ளே நுழையா வண்ணம் இலங்காபுரி பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த முறையா னது எக்காலத்தவர்க்கும் பாடம் புகட்டக்கூடியதாம். உள்நாட்டு ஒற்றுமையும் இனிய வாழ்க்கையும், வெளிநாட்டில் வேண்டியவர்களோடு செய்துகொண்ட உடன் படிக்கையும், வேண்டாதவர்களோடு நிகழ்த்திய போரும்—ஆகிய இவை யாவும் இராவணனுடைய சீரிய ஆட்சி முறையை நன்கு விளக்குகின்றன. அர சாங்கம் எத்தகைய உறுதி வாய்ந்ததாயிருக்க வேண்டும் என்பதற்கு இராவணனுடைய ஆட்சியே சான்றாகும்.

மனது ஆற்றலுடையதாயும் பண்பட்டதாயும் இருக்குமாயின் ஒவ்வொரு செயலிலும் அதன் மேன்மை விளங்கும்.

சீர் அமைப்பு

எதிரியை வெல்லுதற்காக என்று இலங்கையினுள் பிரவேசித்த ராமன், அவ்வூரின் அமைப்பைப் பார்த்து அதிசயிக்கிருன். அத்துறையில் தான் கற்றுக்கொள்ளு தற்கான பாடம் பகைவனிடத்து உண்டு என்பதையும் அவன் அறிகிருன். இலங்கையின் சீர்அழகை அயோத்தியிலும் செய்விக்கவேண்டுமென்று அவன் எண்ணியிருக்கக்கூடும்.

இயற்கையழகு பொருந்திய திரிகூட பர்வதத்தைப் பட்டணம் கட்டுதற்கென்று பார்த்தெடுத்தவன் நுண்ணறிவாளஞயிருந்திருக்க வேண்டும். அப்பீடபூமி மட்டமாகவும் விசாலமாகவும் இருந்தது. ஊரை வேண்டியவாறு விரிப்பதற்கு அது இடம் கொடுத்தது. அகன்ற வீதிகள் நேராக வகுக்கப்பட்டிருந்தன. மாளிகைகள் ஒன்ருேடொன்று பிணைந்துகொள்ளாது தனித்தனியாகவும் அணியணியாகவும் அமைந்திருந்தன. இரண்டு வீடுகள் ஒரேவிதமாய் அமைக்கப்பட்டிருப்பதை எங்கும் காணமுடியாது. ஒவ்வொரு மாளிகையும் தனக்குத் தானே மாதிரியாயிருந்தது. மூலை முடுக்கு ஆகிய எங்கும் ஒரே துப்புரவு. மரம் செடி கொடிகளின் வளமும் நீர் நிலைகளின் வனப்பும் மனத்தைக் கவர்வனவாயின. மான் மயில் குயில் முதலியன அவ்வூரைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டவைகள் போலக் குலாவி விளையாடின. பூஞ்சோலைக் கிடையில் ஊர் அமைந்ததா அல்லது ஊருக்கிடையில் பூஞ்சோலை

அமைந்ததா என்பது சந்தேகம். இயற்கை யழகும செயற்கை யழகும் அங்ஙனம் ஒன்றித்து இலங்குவன வாயின.

ஊரைச் சுற்றிலும் ஆழமான அகழி. அதன்மீது நான்கு திக்குகளிலும் பாலம். வேண்டும்பொழுது பாலத்தை யந்திரத்தால் மாட்டிவைக்கவும் மடக்கி வைக்கவும் கூடும். சூரிய கிரணம் மிகைபடாமலும் குறைபடாமலும் இலங்கையில் விழும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வேண்டியவாறு வீதிகளில் நீர் தெளிக்கவும், காற்றைக் கொண்டு தூசியை உறிஞ்சி யெடுக்கவும் கற்றுக்கொண்டிருந்தனர். வருணனும் வாயுவும் வேலை செய்தார்களென்று இக்கருத்து உரு வகப்படுத்தி இயம்பப்படுகிறது.

விருக்ஷங்கள் வருஷ முழுதும் புஷ்பங்களையும் பழங்களையும் தந்துகொண்டிருந்தன. இராவணன் விரும்பியபொழுது மலைகளும் மேகங்களும் ஜலத்தைக் கொடுத்தன. நவீன பௌதிக சாஸ்திரம் நமக்குத் தந்துள்ள தனிச் சௌகரியங்கள் பலவற்றை அக் காலத்தே இராவணன் உலகுக்குத் தந்திருப்பதாகத் தெரியவருகிறது. இயற்கையின்கண் உள்ள மேன் மைகள் எக்காலத்துக்கும் பொதுவானவைகளே. கையாள முயலும்பொழுதெல்லாம் அவைகள் பயன் படுகின்றன. இக்காலத்திய மக்கள் பஞ்ச பூதங்களையும் நானாவிதங்களில் பயன்படுத்திக்கொள்வது போன்று முற்காலத்தவரும் பயன்படுத்தி யிருந்திருக்கலாம்.

ஒருவன் குடியிருக்கும் வீட்டையும் அதில் அவன் வைத்திருக்கும் பண்டங்களையும் பார்த்தால் அவனுடைய மனப்பான்மை விளங்கிவிடும். உள் உலகு ஆகிய மனது ஓர்மைப்படுகின்ற அளவு வெளியுலகில் ஓர்மையாகவும் அழகாகவும் அது வடிவெடுக்கிறது. இராவணன் பண்பட்ட மனதையுடையவன் என்பதற்கு அவனுடைய ராஜதானியில் பொலியும் சீர்அமைப்பே சான்ருகும். அவனுடைய மனது முற்றிலும் தகைமை பெற்றது என்பதை ஒவ்வொரு சிறு பொருளும் விளக்குகின்றது. இராவணன் முதல்தரமான இரசிகன் ஆவான். எப்பொருளை எங்ஙனம் கையாண்டால் அது பண்பும் பயனும் பெறும் என்பது அவனுக்குத் தெற்றெனத் தெரியும்.

பத்து இந்திரியங்களோடு கூடிய மனதின் அவதார புருஷனுகிய இராவணன் இகலோக வாழ்க்கையை வாழ்தல் இவ்வாறு என்பதைத் தன் செயலால் விளக்குகிறன். மனதின் அழகையும் ஆற்றலையும் பாழ்படுத்துவது மேன்மை எனப்படமாட்டாது. உள்ளத்தில் புதைந்து மறைந்து கிடக்கும் இனிமையையும் எழிலையும் தகைமையையும் தோற்றுவித்தலே வாழ்க்கைப் பயனும். இப்பொழுது கைவசமுள்ள இவ்வுலக வாழ்க்கையை முறையாகப் பயன்படுத்திக்கொள்ள இயலாதவர் எவ்வுலக வாழ்க்கைக்கும் உரியவர் ஆகார். எப்படியோ உயிர் வாழ்ந்தால் அல்லது காலத்தைக் கடத்திஞல் போதாது. பெருவாழ்வு வாழ்பவரே பேறு அனைத்துக்கும் உரியவர் ஆவர். திட்பமும் ஊக்கமும் வாய்ந்த

மனமுடையாரே பெருவாழ்வுக்குத் தகுதியுடையவர். இராவணனுடைய வாழ்க்கை புகட்டும் பாடம் இதுவே.

கயிலையை எடுக்க முயன்றது

இலங்கை வேந்தனுடைய புஷ்பக விமானம் செல்லாத இடம் கிடையாது. மூன்றுலோகங்களிலும் எங்கு வேண்டுமானாலும் அது போகும். இராவணன் விரும்புவதுதான் பாக்கி; அவன் எண்ணியாங்கு அது விரைந்து பாயும். ஆனால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் அது செயலற்று நின்றுவிடுகிறது. கயிலைமலைச் சாரலில் அண்ணன் குபேரன் எளிதில் வெல்லப்பட்டான். தான் அடைந்த வெற்றியில் தப்பிக்குத் தனிப் பெருமை யொன்றும் கிடையாது. இதுபோன்று எத்தனை வெற்றிகளை அவன் எங்கெங்குக் கண்டுள்ளான்! உடன் பிறந்தவனை எளிதில் வென்றுவிட்டு எப்பக்கம் போவதென்று அவன் பார்க்கிறான். கண்ணெதிரே கயிலை மலையானது கனகமயமாகக் காட்சிகொடுக்கிறது. விமானத்தை அதன்மீது விடு, விடு என்கிறான். ஆனால் அதுஅசையமாட்டேனென்கிறது. அரக்கர்கோனுக்கு அடங்காக்கோபம் வந்துவிடுகிறது. அழகிய அம் மலையைப் பெயர்த்துத் தன் ஊரில் கொணர்ந்து நாட்டிவிட நினைக்கிறான். திட்பமே வடிவெடுத்த தோள்கொண்டு அதைத் தாவிப்பிடிக்கிறான். பற்றிய வேகத்தால் மலையும் சிறிது அசைகிறது. அதிலுள்ள சிவகணங்கள் அஞ்சி நடுங்குகின்றன. மலைமகளாகிய பார்வதியும் பயந்து பரமசிவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுகிறாள்.

அப்பொழுது இறைவன் விளையாட்டாகக் காலின் பெருவிரலால் அந்த மலையை அழுத்தினர். பத்துத் தலையானுடைய புஜங்கள் அதன்கீழ் அகப்பட்டு நசுங்கின. ராக்ஷசாதிபதி ரோஷத்தாலும் வலியாலும் மெய்ம்மறந்து மூன்று லோகங்களும் நடுங்கும்படி கூச்சலிட்டான். ஊழிக்காலம் வந்துவிட்டதோவென்று உயிர்களெல்லாம் கலங்கின. தேவதைகள் தாங்கள் போகும் வழியில் தள்ளாடித் தவறிக் கீழே விழுந்தார்கள். கடல்கள் கலங்கின. மலைகள் நடுங்கின. யக்ஷவித்யாதர சித்தகணங்கள் இதென்னவென்று ஆச்சரியப்பட்டார்கள். அரக்கவேந்தனது அமைச்சர்கள் அவனைப் பார்த்து, "உமாபதியைத் தவிர வேறு கதியில்லை. ஆகையால் நீலகண்டனை வணக்கமாக வழுத்தி அவரைச் சரணமடைவதே நலம்" என்றார்கள். அப்படியே இராவணன் சாம கானத்தால் ஆயிரம் ஆண்டுகளாகப் பரமசிவனைப் பக்தியுடன் துதித்தான். கடவுளும் களிப்படைந்து அவனை விடுவித்தார்.

சக்தியின் பல்வேறு வடிவங்களாகத் தோன்றுவது உலகம். இத்தனை வகைத் தோற்றங்களில் மனது எதையும் மிச்சம் வைப்பதில்லை. அதனுடைய ஆதிக்கம் அவை யாவற்றின் மீதும் பரவுகிறது. அணுமுதல் அண்டம் வரையில் உள்ள அனைத்தையும் அது தன் வசப்படுத்துகிறது. அவைகளை உருமாற்றி அமைக்கவும், இடம் மாறி வைக்கவும் வல்லது மனது. சிறியதைப் பெரியதாக்குவதும் பெரியதைச் சிறியதாக்குவதும் அதற்கு விளையாட்டுப்போன்றவை. இப்படி

உலகை வேண்டியவாறு எடுத்து விளையாடுவதால் வல்லமையில் தனக்கு நிகரானவர் யாருமில்லை என்னும் செருக்கு மனதுக்கு வந்துவிடுகிறது.

கயிலாயகிரி முற்றும் சிவமயமானது. அறிவுக் கறிவாய், உயிருக்குயிராய் இருப்பது சிவம். அதைத் தாக்கவோ, புறக்கணிக்கவோ, அழிக்கவோ மனது முயன்றால் அது தானே தட்டழிந்து போய்விடும். அழிவி லின்று தன்னைக்காத்துக்கொள்ள விரும்பினால் தனக் கும் மூலகாரணமாகிய சிவத்தை வாழ்த்தி வணங்கு வதைவிட வேறு உபாயம் அதற்குக் கிடையாது. உயி ரைப் பாராட்டுபவர் உயிரைப்பெறுகின்றனர். அறிவை ஆதரிப்பவர் அறிவைப் பெறுகின்றனர். உயிரையும் அறிவையும் புறக்கணிப்பவர் தாமே அழிந்துபோகின்ற னர். உயிரையும் அறிவையும் இழக்கும் நிலைமைக்கு வந்துவிட்ட இராவணன் எப்படித் தக்க முறையில் சிவ பூஜை பண்ணித் தனது தனி வியக்தியைத் திரும்பவும் பெற்றான் என்று தேவாரத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. நமது மனதையும் சிவசான் னித்தியத்தில் நிலைத்திருக்கும்படி செய்துவிட்டால் அது சிறுமையை யகற்றிப் பெருமையைப் பெற்றுவிடும்.

சாபம்

அமைச்சர்களுடன் ஆலோசிக்காது அரக்கர்கோன் எக்காரியத்திலும் ஈடுபடுவதில்லை. அவர்களுடையஅபிப் பிராயத்தை அனுசரித்துச் செயலில் இறங்கியதே அவன் அடைந்த வெற்றிகளுக்கெல்லாம் முக்கியமான காரண

மெனலாம். அறிவுடையோருடைய பொதுவெண்ணம் இறைவனுடைய திருவுளத்துக்கு ஒப்பானதன்றோ? ஆனால் ஒருசமயத்தில் மட்டும் அவர்களுடைய மந்திராலோசனையை இராவணன் பொருட்படுத்துவதில்லை. கூடுமானவரையில் அவர்களுக்குத் தெரிவிக்காது தன் காரியத்தில் இறங்கிவிடுவான். வசதி வாய்க்கும் பொழுதெல்லாம் வனிதைகளை அபகரிப்பது அத்தொழிலாகும். அவன் கண்ணுக்குத் தென்படுகின்ற மடந்தையர் அவன் கையில் அகப்படுவதும் திண்ணம். எந்தக் கன்னிகையாவது பார்ப்பதற்கு அழகாயிருந்தால், அவளுடைய பந்துக்களை யுத்தம் செய்து கொன்றுவிட்டு, அவளைப் புஷ்பகத்தில் ஏற்றிக் காவலில் வைப்பான். இப்படிப் பன்னக, ராக்ஷஸ, அசுர, மனுஷ்ய, யக்ஷ, தானவ கன்னியர்களைக்கூட்டங் கூட்டமாகச் சேர்த்தான். அவர்களெல்லோரும் உற்றார் உறவினர்களை விட்டுப் பிரிந்த வருத்தத்தால் மனம் வாடி அக்கினிக் கொழுந்துகள் போன்ற கண்ணீர்களை உதிர்த்தார்கள். ஆறுகளால் கடல்கள் நிறைவது போன்று அவர்களுடைய கண்ணீரால் அந்த விமானம் நிறைந்தது. அதில் எங்கே பார்த்தாலும் அழுகையும் கூக்குரலும் புலம்பலுமா யிருந்தன.

இராவணன் மங்கையரைச் சிறையெடுத்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. காமநோய்க்கு உட்பட்டிருந்ததும், போர்புரிவதில் ஆர்வம் கொண்டிருந்ததும் அக்காரணங்களாயின. அவன் பெண்ணாசைக்கு இலக்காகி அவர்களை அபகரித்துக்கொண்டு வந்ததுண்டு.

சில மடந்தையர் மன்மதோபாதை பொறுக்க முடியாமல் தாமே இராவணனை வந்தடைந்தனர். ஆனால் அவனால் பலாத்காரம் செய்து பெண்களெல்லாம் கொண்டு போகப்பட்டது எப்பொழுதுமே காமத்தால் தூண்டப் பட்டன்று. யாராவது ஒரு வீரனோடு சண்டை செய்ய விரும்பினால் அவனுக்குரிய பெண்களை இராவணன் அபகரிப்பான். அச்செயலும் அவனைப் போரில் கொண்டு சேர்த்துவிடும். இங்ஙனம் காமத்தாலும் சண்டைத் திமிராலும் தூண்டப்பட்டு அவன் மங்கையரைப் பெரு மிதமாகத் தூக்கிக்கொண்டு போனான்.

புஞ்ஜிகஸ்தலை என்னும் அழகுவாய்ந்த அப்சர மடந்தை யொருத்தி பிரம்மாவிடத்தில் பக்தி பூண்ட வளாயிருந்தாள். அவள் ஆகாயத்தில் பிரம்மதேவனது பவனத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் அகஸ்மாத் தாக இராவணன் அவளைக் கண்டான். எந்த ஸ்திரீயைக் கண்டாலும் ஏதேனும் ஒரு விதத்தில் அவளை மான பங்கம் செய்வது அவனுடைய வழக்கம். புஞ்ஜிகஸ்தலை அவ்வழக்கத்தினின்று தப்பித்துக்கொள்ள இயலாதவ ளாயினள். பத்துமுகனால் தாக்குண்டு தவித்துக்கொண் டுபோய் நான்முகனிடம் முறையிட்டாள். தமது அருளுக் குரிய கன்னிகை யடைந்த இழிமையைக் கேட்ட பிரம்மா வுக்குப் பகரவொண்ணாக் கோபம் மூண்டுவிட்டது. "நீ பரஸ்திரீகளைப் பலவந்தமாகச் சேர்வாயாயின் உன் தலை நூறு சுக்கலாக வெடிக்கும்," என்று அவர் இராவ ணனைப் பார்த்துச் சாபமிட்டார். இந்தச் சாபத்துக்குப்

பிறகு இலங்கேசன் பெண்களைச் சிறைப்படுத்த முடிந்ததேயொழிய அவர்களுடைய கற்பை அழிக்க முடியவில்லை.

மனுஷத்துவம் எக்காலத்தும் இந்தச் சாபத்துக்கு உட்பட்டதா யிருக்கிறது. தனக்கு உரியது அல்லாதது எதையும் அது அனுபவிக்க முடியாது. அப்படி அனுபவிக்குமளவு அது சிறுமையையே அடைந்து வருகிறது. நம்மில் பெரும்பாலாருடைய மனது நூறு சுக்கல் அல்ல, எண்ணிறந்த சுக்கல்களாகச் சிதறடைந்து வருகிறது. இந்த மனம் கொள்ளும் ஆசைக்கோர் அளவில்லை. உலகத்தில் உள்ள அனைத்தையும் அது அனுபவிக்க வேண்டுமென்கிறது. அப்படி அனுபவிக்கப் புகுமுன்பு தன்னைத் தானே கேள்வி யொன்று கேட்கவேண்டும்:— "இப்பொருளை அல்லது பதவியை அனுபவிப்பதற்கு எம்முறையில் நான் தகுதி யுடையவன்? இதற்கும் எனக்கும் உள்ள தொடர்பு யாது?" நம்மை நாமே கேட்பது போன்று உலகத்தவரோடு மந்திராலோசனை செய்தாலும் நமது உரிமையின் எல்லை நமக்கு விளக்கிக் காட்டப்படும். முறையுடன் பாடுபட்டு ஒன்றைச் சம்பாதித்து அனுபவித்தால், இராவணனுடைய அமைச்சர்களைப்போன்று உலகமும் அதை ஆமோதிக்கும்; மனதும் அத்தகைய நற்செயலின் மூலம் திட்பத்தையும் மேன்மையையும் பெறும். ஆனால் போகத்தையும் பொருளையுமே முறைதவறி அபகரிக்கின்ற மனது உலகத்தவர் கருத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. பின்பு தெய்வத்தன்மையை இழந்து அது துக்கத்துக்கு இருப்பிடமாகிறது.

ராம இராவண யுத்தம்

தன் மந்திரிகளுக்குத் தெரிவிக்காது இராவணன் சீதையை அபகரிக்கப் போகிறான். ராமனை அவள் பிரிந்திருக்கும் சமயம்பார்த்துச் சந்தேகத்துக்கு இட மில்லாத சன்னியாசி வேடம் பூண்டு அவளை ஏமாற்றி வஞ்சகமாகத் தூக்கிக்கொண்டு போய்விடுகிறான். ராம னோடு யுத்தம்புரிய அவன் ஆயத்தமாயில்லை. சீதை தனக்கு வசப்பட்டால் போதுமானது. ஆனால் உண் மையில் அவள் ராமனைத்தவிர வேறு உயிர்த்துணையை அறியாள். இந்த நிலையில் அணுகமுடியாத இலங்கைக் குள் ராமன் தன் பரிவாரங்களோடு பிரவேசித்துவிட் டான். சீதையைத் தன்னிடம் ஒப்படைத்துவிட்டால் சமாதானமாகத் தான் இலங்கையைவிட்டுப் பின்வாங்க ஆயத்தமாயிருப்பதாக ராமன் தெரிவிக்கிறான். இராவ ணன் அதற்கு இசைந்தபாடில்லை. யுத்தம் துவங்குகிறது. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் பெருமிதமாய் விளை கின்றன. இப்பொழுதாவது எதிரியின் எண்ணம் மாறி விட்டதாவென்று ராமன் ஆராய்ந்து பார்க்கிறான். பிறகு அவனுடைய சேனைத்தலைவர்களும் உற்றாரும் உறவி னரும் உடன் பிறந்தவனும் மாய்கின்றனர். அப்பொழு தும் அரக்கர்கோனுக்கு அறிவு வரவில்லை. தன்னுடைய ஆற்றலெல்லாம் திரண்டு ஒரு வடிவாக வந்த இந்திர ஜித்தும் மடிகிறான். இப்பொழுது இராவணன் தானே யுத்தரங்கத்தில் தோன்றுகிறான். ராம இராவண யுத்தம் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருக்கிறது. தேவர்களும் ரிஷி களும் அதைப் பார்த்து அதிசயிக்கின்றனர். இராவ

ணனுடைய தலைகள் வெட்ட வெட்டப் புதிது புதிதாக முளைத்துக்கொண்டே யிருக்கின்றன. ராமன் புதிய புதிய அஸ்திரங்களைப் பிரயோகிக்கிறான். விதவிதமாகவும் போர்புரிகிறான். ஆனால் அரக்கர் தலைவன் மட்டும் அழிந்தபாடில்லை. முடிவாக ராமன் பிரம்மாஸ்திரத்தை எடுத்து ஏவுகிறான். ராவணன் திரும்பவும் தலை தூக்காவண்ணம் தரையில் வீழ்ந்து மடிகிறான். சீதை ராமனைச் சேர்கிறாள்.

ஜீவர்கள் எல்லாரும் சீதா தேவியின் அம்சங்களாயிருக்கின்றனர். மனது என்னும் இராவணன் உயிர்களை இறைவனிடமிருந்து பிரித்துவைக்கிறான். சீதை அசோக வனத்தில் அழுதுகொண்டிருந்தது போன்று ஜீவர்கள் பரமாத்மனை நாடி ஏங்கி யிருத்தலே அவர்கள் செய்யும் சாதனங்களாகும். ஆஞ்ஜனேயர் சீதைக்கு நம்பிக்கையூட்டியது போன்று குருவானவர் ஜீவனுக்கும் பரமாத்மனுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறார். ராமன் கையில் ராவணனுடைய பக்க பலங்களெல்லாம் குறைந்தது போன்று இறைவன் அருளால் மனதின் வேகங்களெல்லாம் கெடுகின்றன. பிரம்மாஸ்திரத்தால் இராவணன் வீழ்ந்தது போன்று பிரம்ம ஞானத்தால் மனது ஒடுங்குகிறது. ஜீவன் சிவத்தோடு சேர்கிறது. நமது வாழ்க்கை என்னும் இராமாயணம் இங்ஙனம் பூர்த்தியாகவேண்டும்.

புகட்டும் பாடம்

பல விதங்களில் நாம் இராவணனைப் பின்பற்றுவது பொருந்தும். அவனுடைய ஆண்மை, மனவலி, தூக்கி

வினையாற்றும் தன்மை, இடையரு முயற்சி, ஆக்கத்துக்கு ஏதுவான செயல்கள், ஆட்சிமுறை முதலாயின எல்லார்க்கும் எக்காலத்தும் பாடம் புகட்டுவன வாகின்றன. மக்களை மேல் நிலைக்கு எடுத்துச் செல்லுதற்கு அவன் அடைந்திருந்த பண்பில் ஒருசிறு பகுதி போதுமானது. ஆண்மையில் பயிற்சி பெறுபவர் இராவணனை மாதிரி மனிதனாக வைத்துக்கொள்வது தகும்.

பின்பு இராவணனிடத்திருந்த குற்றந்தான் என்ன? எக்காரணத்தால் அவனுடைய ஒப்பற்ற வாழ்க்கையே பெருந் தோல்வியாக முடிந்தது? பராக்கிரமங்கள் பல படைத்திருந்தும் காமம் ஒன்று நெஞ்சினுள் நுழைந்து அவைகளை யெல்லாம் தேய்த்துவிட்டது. இந்த ஒரு குற்றம் அவனிடத்திலில்லாதிருந்தால் அவன் எவ்வளவு மேலானவனாயிருந்திருப்பான்! பிற மேன்மைகள் பல இருந்தும் இந்த ஒரு குற்றம் வந்து அவனை எவ்வளவு சிறியவன் ஆக்கிவிட்டது! நமது மனது ஆசையை வெல்லும்போது அது தேவனாகிறது; ஆசைக்கு உட்படும்போது அது அரக்கனாகிறது. இராவணனுடைய வாழ்க்கை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் லங்கா ராஜ்யம் ஒப்பு உயர்வு அற்றது. ஆயினும் வெறும் கால் நடையாக வந்த ராமன், காட்டுக் குரங்குகளின் உதவியைக் கொண்டு அத்தகைய ராஜ்யத்தை அறவே அழித்துவிட்டான். ராமனுக்குத் துணையாயிருந்தது தர்மம். தர்ம தேவதை துணையாயிருக்கும்பொழுது அற்பப்

பிராணிகளும் ஒப்பற்ற உபகரணங்களாகின்றன. இராவணனுக்கோ தர்மத்தின் சகாய மின்மையால் ஏனைய ஒப்பற்ற பலங்களெல்லாம் பயனற்றவை களாயின. தர்மத்தை வெல்லவல்லது எதுவும் இல்லை.

நம்முடைய வாழ்க்கையில் நாம் ராமனுடைய தர்மத்தையும் இராவணனுடைய இதர பலத்தையும் ஒன்று சேர்த்தால் எத்தகைய சீரும் சிறப்பும் வாய்க்கப் பெற்றவர்களாவோம்! ராம இராவண நன்மைகளை இணைக்கத் தெரிந்து கொண்டால் இவ்வுலகில் அல்லது வேறு எவ்வுலகிலாயினும் நாம் அடைய முடியாத மேன்மை யாது உளது?

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை
திருச்சி

விலை அணா ஆறு